# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
# S.C. NO. 131/2021

**05.12.2024. அ.சா. 5 அமலா**

**எதிரிகள் தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி 5 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

A1 to A3 present.

இறந்துபோன ரமேஷ் என் கணவரின் தம்பி. அ.சா.1 ரவி என் கணவர். ரமேஷ் இறந்து விட்டார் என்று எனக்கு 07.03 2017 அன்று வீட்டில் இருந்தபோது மதியம் 02.00 மணிக்கு தெரியவந்தது. இந்த தகவல் எவ்வாறு தெரிந்தது என்று கேட்டால் ஊர் பொதுமக்கள் சொன்னார்கள். ரமேசின் பிரேதத்தை நான் எங்கு பார்த்தேன் என்று கேட்டால் அவர் வீட்டில் பார்த்தேன். ரமேஷ் இறப்பதற்கு முன் அவரை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்று கேட்டால் ரமேஷ் இறப்பதற்கு முந்நாள் இரவு 08.00 மணியளவில் அவர் வீட்டிலேயே அவரை பார்த்தேன். அதன்பிறகு நான் அவரை நான் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் 08.03.2017 அன்று மாலை விசாரித்தார்கள். நேரம் சரியாக ஞாபகம் இல்லை. அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிசாரின் பெயர் , பதவி எனக்கு தெரியாது. ரமேஷ் கொலை செய்யப்பட்டதை நான் நேரடியாக பார்க்கவில்லை. ரமேஷ் கொலை செய்யப்பட்டார் என்று முதல் விசாரணையி ல் யூகத்தின் அடிப்படையில் சொன்னேனா என்றால் இல்லை. 07.03.2017 அன்று இரவு 8 மணிக்கு ரமேஷை 2 ம் எதிரி சரண்யா துடைப்பத்தால் செத்துப்போடா என்று அடித்தாதை நான் நேரில் பார்த்தேன். அவ்வாறு சாட்சி அளித்தவாறு போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் மாமியார் காசியம்மாள் ரமேஷை அழைத்துச்சென்று அவர் வீட்டில் சாப்பாடு போட்டார் என்று போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2 வது எதிரி சரண்யா என் நாத்தனார் மீனாவிடம் " உன் தம்பியை பார் " என்று அழைத்துச்சென்றதை நான் நேரில் பார்க்கவில்லை. என் நாத்தனார் மீனா இறந்த ரமேஷை பார்த்ததை நான் நேரில் பார்க்கவில்லை. என் நாத்தனார் கதறி அழுத

விவரத்தை நான் நேரில் பார்த்ததாக போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எந்த சம்பவத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல- என் கணவர் ரவி மற்றும் நாத்தனார் மீனா கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் இவ்வழக்கில் விசாரிக்கவே இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/-B.C. Gopinath., M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.